**தலைப்பு 208- தேசிய நூதனசாலைகள் திணைக்களம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 208 - தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2023 மே 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்கள நிதிக் கூற்றின் நிதி அல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள காணி மற்றும் கட்டிடங்கள் முறையே ரூபா 10,002,369,340 மற்றும் 800,000,000 என 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையொன்றினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டிருந்தது. இந்த சொத்துக்களின் கிரயம் மதிப்பிடப்பட்டு அண்ணளவாக 09 ஆண்டுள் கடந்திருந்த போதிலும், அரசின் நிதி அல்லாச் சொத்துக்களின் பெறுமதி மதிப்பிடுவதற்கான 2018 திசெம்பர் 31 திகதிய 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் வழிக்காட்டிகளின் பிரகாரம் அச் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து சரியான பெறுமதிகளை கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொழும்பு தேசிய நூதனசாலை அமைந்துள்ள காணி 2022.03.29 ஆந் திகதி இந்த திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டது. இந்த காணியினை மதிப்பிடுவதற்காக விலைமதிப்புத் திணைக்களத்திற்கு 2022.03.30 ஆந் திகதி முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்காக கட்டிடங்களின் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் கோரப்பட்டுள்ளமையினால், அத் திட்டங்களின் பிரதிகள் பெற்றுக் கொடுக்குமாறு கொழும்பு நகர சபையிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அத் திட்டங்களின் பிரதிகள் பெற்றுக் கொள்வதற்கு அண்ணவளாக ரூபா 100,000.00 - 80,000.00 பணத்தொகை செலவிடப்படுமென நகர சபை தெரிவித்துள்ளது. அதற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட பின்னர் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பிரதான அலுவலக கட்டிடம் மற்றும் காணி நிகழ்கால விலை மாற்றங்களிற்கு அமைவாக மீள கணிக்கப்பட்டு புதிய மதிப்பீட்டு பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ii)** | திணைக்களத்திற்கு சொந்தமான ஏனைய பிரதேச நூதனசாலைகளான பொலொன்னறுவையின் பழைமையான தொழிநுட்ப நூதனசாலை மற்றும் மாகம்புர ருஹுனு நூதனசாலை தொடர்பான காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் கணக்காய்வு திகதியாகையில் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒலந்த இராணுவ நூதனசாலை அமைந்துள்ள காணியை இந்த திணைக்களத்திற்கு கையேற்பதற்குரிய அங்கீகாரத்தினை விரைவாக கொழும்பு பிரதேச செயலாளருக்கு பெற்றுக் கொடுக்குமாறு காணி ஆனையாளர் அலுவலகத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், பொலொன்னறுவை பழைமையான நூதனசாலை அமைந்துள்ள நிலப் பகுதி மதிப்பிட்டு தருமாறு 2021 ஆம் ஆண்டு தொடக்கம் பல சந்தர்ப்பங்களில் விலைமதிப்பு திணைக்களத்திற்கு கடிதங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், இது வரையில் பணி நிறைவேற்றப்படவில்லை எனவும், 1941 தேசிய நூதனசாலைகள் திணைக்கள சட்டத்தின் பிரகாரம் சொத்துக்களை கையாளும் உரித்து மட்டும் கண்டி நூதனசாலை தொடர்பாக திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது எனவும், ருஹுனு நூதனசாலை அமைந்துள்ள காணி மதிப்பிடப்பட்டு தருமாறு மீளாய்வாண்டில் 04 சந்தர்ப்பங்களின் போது கடிதங்கள் ஊடாக விலைமதிப்பு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கண்டி நூதனசாலை அமைந்துள்ள சொத்தனை தவிர ஏனைய காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பிடப்பட்டு, சொத்துக்கள் சுவீகரிக்கப்பட்ட பின்னர் கிரயம் கணக்கிடப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினால் தொல் பொருட்களை சேகரிக்கும் முகாமைத்துவ கொள்கையொன்று 2022 திசெம்பர் வரையிலும் அறிக்கையிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை. அவ்வாறே இலங்கையினுள் காணப்படும் | தொல் பொருட்களை சேகரிக்கும் முகாமைத்துவ கொள்கையொன்று தயாரிப்பதற்காக நூதனசாலைகள் பணிப்பாளர் நாயகத்தினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக் | தொல் பொருட்களை சேகரிக்கும் கொள்கையொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் நூதனசாலைகள் அமைப்பினை |

| | | |
|---|---|---|
| ஒட்டுமொத்த நூதனசாலை அமைப்பினையும் ஒழுங்குறுத்தும் அதிகாரம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்கு பெறப்படும் வகையில் நடப்பில் காணப்டும் சட்டத்திற்குரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நூதனசாலைகள் துறையின் ஒழுங்குறுத்துகை அதிகாரம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குழுவினால் குறித்த கொள்கையின் பகுதியொன்று தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. | ஒழுங்குறுத்தும் முறைமையொன்றினை தயாரித்தல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பு தேசிய நூதனசாலை நூலகத்திற்கு தீயணைப்பு பாதுகாப்பு அமைப்பொன்றினை தாபிப்பதற்காக 2021 சனவரி 01 ஆந் திகதி ரூபா 98,550,000 ஆன கிரய மதிப்பீடொன்றின் கீழ் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2022 மார்ச் 31 ஆந் திகதி அப் பணிகள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த செயலாற்றல் 35 சதவீதமாக காணப்பட்டதுடன், அத் திகதியில் உள்ளவாறு நிதிச் செலவீனம் ரூபா 28,579,655 ஆக காணப்பட்டது. 2023 ஏப்ரல் 04 ஆந் திகதி வரை இந்த செயற்திட்டத்தின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2003 ஏப்ரல் 30 ஆந் திகதிக்கு முன்னர் இந்த செயற்திட்டத்தின் வேலைகளை நிறைவு செய்யுமாறு DIMO நிறுவனத்திற்கு (வழங்குனருக்கு) தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டங்களை தாமதமின்றி நிறைவு செய்து உச்ச செயலாற்றல் மட்டத்தினை உறுதிச் செய்துக் கொள்வதற்கு உயர் முகாமைத்துவம் கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச துறையின் பெறுகைகள் மின்னியல் பெறுகைகள் முறைமைக்கு தயாரித்தல் தொடர்பாக ஆலோசனை பெற்றுக் கொடுத்த நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சின் PED/e-GP/Circular/2018 ஆம் இலக்க மற்றும் 2019 திசெம்பர் 17 திகதிய சுற்றறிக்கை மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் | அச் சுற்றறிக்கையின் பிரகாரம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினுள் ஒரு தொடர்பு அதிகாரியாக (Liaison Officer) நியமிக்கப்படக் கூடிய, அரச சேவையின் பெறுகை அறிவு, பொருண்மையான மதிப்பாய்வு மற்றும் கணிசமான அனுபவமுள்ள மற்றும் தகவல் மற்றும் தொழிநுட்பம் தொடர்பான அறிவுடைய நிர்வாக | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| PED/e-GP/Circular/2018 ஆம் இலக்க மற்றும் 2018 ஒக்தோபர் 23 திகதிய சுற்றறிக்கை பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உத்தியோகத்தரொருவர் தற்போது காணப்டாமையினால், இந்த சுற்றறிக்கை திணைக்களத்தினுள் இன்னுமாக அமுல்படுத்தப்படவில்லை. அத்தகைய உத்தியோகத்தரொருவர் வருகைத் தந்தவுடனே நியமிக்கப்பட்டு மின்னியல் பெறுகைகள் **(e-GP)** முறைமைக்கு அமைவாக நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என தெரிவித்துக் கொள்கின்றேன். | |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் கேட்போர் கூடம் நீண்ட காலமாக நாளாந்தம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையின் காரணத்தினால் விளைவற்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நூதனசாலைகள் திணைக்களத்தின் கேட்போர் கூடம் கொவிட் தொற்று காலத்தினுள் பயன்பாடு குறைந்திருந்த போதிலும் தற்போது திணைக்கள பணிகளுக்காகவும், வெளி தரப்பினரின் கோரிக்கைகளுக்காகவும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்றது. | திணைக்களத்திற்குரிய சொத்துக்கள் குறை பயன்பாடின்றி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இயற்கை விஞ்ஞான நூதனசாலையின் உயிரியல் கூடத்தினை ஒட்டிய இரண்டாம் மாடியின் இடது பக்க பகுதி முழுமையாக மூடப்பட்டுள்ளதுடன், 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த பகுதி பொதுமக்கள் காட்சிப்படுத்தலில் இருந்து நீக்கப்பட்டிருந்தது. இந்த பகுதிக்காக பொருத்தமான பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பார்வைக்காக விரைவில் திறந்து வைப்பதற்கு அல்லது பயனுறுதிமிக்க பணியொன்றிற்கு இந்த விளைவற்ற பகுதியினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய இயற்கை விஞ்ஞான நூதனசாலையின் கூடங்களை புதிதாக்கும் நடவடிக்கைகளுக்கான பிரதான திட்டமொன்று (Master Plan) தயாரிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு தொடக்கம் அத் திட்டத்தின் பிரகாரம் பகுதி பகுதியாக புதிதாக்கப்படுகின்றது. அதற்காக பெறப்படுகின்ற நிதியேற்பாடு மற்றும் காணப்படுகின்ற தொழிநுட்ப வல்லுநர்களின் அளவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | 07 ஆண்டுகளாக மேற்கொள்ளப்படுகின்ற இந்த பணிப்பொறுப்பின் தாமதத்தினை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான நிதியேற்பாடு மற்றும் பதவியணி பெற்றுக் கொள்ளப்பட்டு பணியினை நிறைவு செய்தல் வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 மார்ச் 07 ஆந் திகதி மரணித்த விஜய பட்டத்து யானையின் பூவுடலினை பாதுகாப்பதற்காக திணைக்களத்தினால் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சரும சீரமைப்புக்கான அடிப்படை பணிகளுக்காக ஸ்ரீ தலதா மாளிகையினால் ரூபா 375,530 உம், திணைக்களத்தினால் ரூபா 284,833 உம் செலவிடப்பட்டிருந்ததுடன், இதற்கான திணைக்கள செலவீனத்திற்கு ஸ்ரீ தலதா மாளிகையினால் ரூபா 1,182,453 ஆன தொகையும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. 2022 மார்ச் 16 ஆந் திகதி யானையின் பூவுடலிலிருந்து அகற்றிய சருமம் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான உறைவிப்பானொன்றில் வைக்கப்பட்டிருத்தல் மற்றும் எதிர்கால பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக யானையை காட்சிப்படுத்துவதற்கு பொருத்தமான இடமொன்று விரைவில் தெரிவு செய்யாதமையின் காரணத்தினால் பாதுகாப்பு நடவடிக்கைகள் உரிய முறையில் நிறைவேற்றல் தாமதித்திருந்ததுடன், யானை சருமத்தின் தரம் தொடர்பில் அபாயமொன்று காணப்பட்டது. | நதுன்கமுவ விஜய பட்டத்து யானையின் பூவுடல் பாதுகாப்பதற்கான பொருத்தமான இடமாக இனங்காணப்பட்டிருப்பது நூதனசாலைகள் திணைக்களத்திற்கு சொந்தமான லக்சல நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கட்டிடமொன்றாகும். அதன் பிரகாரம் லக்சல நிறுவனத்திடம் பொருட்களை அகற்றுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அப் பொருட்களை அகற்றியவுடனே அந் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். | விஜய பட்டத்து யானையின் பூவுடல் மீண்டும் மீள்சீரமைக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு வைப்பதற்கு பொருத்தமான இடமொன்று விரைவாக தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் யானையினை மீள்சீரமைக்கும் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) திணைக்களத்தின் புவியியல் பிரிவின் 272 மாணிக்க கற்கள் இலங்கை வங்கியின் மெட்ரோபொலிடன் கிளையில் 1964 செப்தெம்பர் 18 ஆந் திகதி தொடக்கம் காணப்பட்டதுடன், 1993 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அதில் ஒரு செயற்கை கல் என இனங்காணப்பட்ட பின்னர் அக் கல் புவியியல் பிரிவில் வைக்கப்பட்டது. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் இரத்தியவியல் நிபுணரின் உதவியினை பெற்றுக் கொண்டு இந்த எஞ்சிய 271 | குறித்த மாணிக்க கற்கள் மதிப்பிடப்பட்டு அறிக்கையொன்று பெற்றுக் கொடுக்குமாறு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையிடம் கோரப்பட்டுள்ளது. | நிகழ்கால நிதி பெறுமதி மதிப்பிடுவதற்கு மற்றும் மீளாய்வொன்று மேற்கொள்வதற்கு உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

கற்களின் நிகழ்கால பெறுமதி மதிப்பிடப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4. மனித வள முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 566 ஆக காணப்பட்ட போதிலும், உள்ளவாரான பதவியணி 361 ஆக காணப்பட்டமையினால் அத் திகதியில் உள்ளவாறு வெற்றிடங்கள் எண்ணிக்கை 203 ஆகும். இந்த வெற்றிடங்களில் நிறைவேற்று மட்டத்தின் 16 பதவிகளில் 06 பதவிகளும் மூன்றாம் நிலை பதவிகள் 05 இல் 04 பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன், 103 இரண்டாம் நிலை பதவிகளும், 90 முதல் நிலை பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன. இந்த ஊழியர் பற்றாக்குறை மீளாய்வாண்டிலும் நிரப்புவதற்கு முடியாதிருந்தது. | முதல் நிலை மட்டத்தின் வெற்றிடங்களுக்காக பல்துறை மேம்பாட்டு உதவியாளர்கள் பெற்றுக் கொடுக்குமாறு புத்தசாசனம், மத மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சிற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலை பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொடுக்குமாறு பிரதம அமைச்சரின் செயலாளருக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. | இந்த ஊழியர் பற்றாக்குறையினை நிரப்பி நிறுவனத்தின் செயலாற்றலினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வெற்றிடங்களினுள் உள்ளடக்கப்பட்டுள்ள MN – 4 தரத்தின் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிகள் திணைக்கள பதவிகளாக காணப்பட்டதுடன், அது 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடங்களாக காணப்படுகின்ற, மிகவும் பொறுப்புடனான பணிப்பொறுப்பினை நிறைவேற்றப்பட வேண்டிய இந்த பதவியினை நிரப்புவதற்கு பொது நிர்வாக அமைச்சிடம் அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும், அங்கீகாரம் பெறப்படாமையினால் அப் பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடங்களாக காணப்படுகின்றன. | பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவி உள்ளடங்கலாக MN – 4– 2016 பிரிவில் 05 வெற்றிடங்கள் நிரப்புவதற்காக திணைக்களம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்ட போதிலும், குறித்த அமைச்சின் ஆலோசனை மற்றும் பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் பொருத்தமான பட்டதாரிகள் இணைப்பதற்காக அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் விசாரிக்கவும் இதற்கு மேலதிகமாக தேவையான வெற்றிடங்கள் நிரப்புவதற்காக மீண்டும் குறித்த அமைச்சிற்கு | இந்த ஊழியர் பற்றாக்குறையினை நிரப்பி நிறுவனத்தின் செயலாற்றலினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| | | 2023.03.30 ஆந் திகதி கடிதம் முன்வைக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | தேசிய நூதனசாலையின் தொல் பொருட்கள் தொடர்பாக பொதுப் புரிதலை வழங்குவதற்கு போதுமான பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் காணப்படாமை மற்றும் பூச்சியியல், விலங்கியல், இயற்கை அறிவியல் மற்றும் புவியியல் பிரிவுகள் போன்ற இயற்கை விஞ்ஞான பிரிவுகளின் ஆராய்ச்சிகளுக்காக பயன்படுத்தப்படும் தொல்பொருட்களை பராமரித்தல், ஆவணப்படுத்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் புதிய பொருட்களை சேகரித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு போதுமான ஊழியர்கள் பணிக்கப்பட்டிராமையின் காரணத்தினால் அப் பிரிவுகளின் வினைத்திறன் தொடர்பில் பாதகமான விளைவுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்கு ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளரினால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்ட விதத்தின் பிரகாரம் இந்த பிரிவுகளுக்கு இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | இந்த ஊழியர் பற்றாக்குறையினை நிரப்பி நிறுவனத்தின் செயலாற்றலினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும |